1974 மார்ச் 20]

Fisheries Research Centre, Mandapam

* 515 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI:
THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government have examined the necessity to develop Mandapam as a Major Research Centre in fishing; and

(b) if so, with what result?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்திய விடுதலைக்கு முன்பேகூட மண்டபத்தை பெரிய மீனள ஆராய்ச்சி நிலையமாக மேம்படுத்த வேண்டிய தேவை உணரப்பட்டது. அதன் பயனுக 1947-ல் மத்திய மீனள ஆராய்ச்சி நிலையம் மண்டபத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இது அண்மையில் கொச்சிக்கு மாற்றப்பட்டது. தற்போது மண்டபத்தில் மத்திய மீனள ஆராய்ச்சித் துணை நிலையம் ஒன்றுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, மீன் அதிகமாகக் கிடைக்கும் பகுதியாதலால் அங்கே ஒரு ஆராய்ச்சி நிலையத்தைப் பெரிய அளவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதிக அளவிற்கு மீன் கிடைப்பதால்தான் 1933-ம் ஆண்டிலிருந்து முடிவெடுக்கப்பட்ட இடமாக மண்டபம் இருக்கிறது. அதற்குரிய வகையில் 'ஐஸ் பிளாண்ட்' 'ஃபிரீசிங் பிளாண்ட்', 'போட் பில்டிங் யார்ட்' போன்ற அத்தனையும் வைக்கப்பட்டிருக்கிறது. 'போட் பில்டிங் யார்ட்' இருப்பதனுல் நிறைய மீனவர்கட்கு படகு கொடுக்க முடிகிறது. நிறைய மீன் பிடிக்கிறுர்கள், ஏற்றுமதியும் செய்யப் படுகிறது. மத்திய ஆராய்ச்சி நிலையம் இருந்தது. அதைத் துணை நிலையமாக மாற்றியமைத்து, மேல்மட்ட அதிகாரிகள் கொச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறுர்களே தவிர, நிலையம் விரிவடைந்துதான் வருகிறது.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, இந்த மீன் வளர்க்கும் திட்டம் மண்டபத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அது போலவே தமிழ்நாட்டில் நாட்டு மீன்களைப் பிடிக்கின்ற வகையில், செங்கற்பட்டு மாவட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரி, மதுராந்தகம் ஏரி போன்ற இடங்களில் தொடங்குவதற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்,

[1974 மார்ச் 20

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மண்டபத்தை அப்படிப்பட்ட நிலையமாக ஆக்கலாமா என்பது தான் கேள்வி. செம்பரம்பாக்கத்தைப் பற்றிய கேள்வி அல்ல இது. எனவே, தனிக் கேள்வி போடவும்.

சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம்

* 516 வினா—திரு. என். கிட்டப்பா

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி கடற்கரைப் பகுதி சின்னமுட்டத்தில் மீன்பிடிக்கும் துறைமுகம் அமைத்திட மத்திய அரசிடம் நமது மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெங்களூரிலுள்ள முன்னோடி முதலீட்டு நில ஆய்வு நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் என்ற இடத்தில் நில ஆய்வு நடத்தி அங்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான அறிக்கையை சென்னை மீனளத்துறை இயக்குநருக்கு அனுப்பியிருக்கிறது. பொதுப் பணித்துறையிடமிருந்து வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளை மீனளத்துறை இயக்குநர் எதிர் நோக்கியுள்ளார். பொதுப்பணித் துறையிடமிருந்து விரிவான மதிப்பீடுகளையும் வரைபடங்களையும் பெற்றவுடன் பணியினை மேற்கொள்வதற்காக இந்திய அரசின் நிர்வாக ஏற்பளிப்பைப் பெறுவதற்காக அவை இந்த அரசுக்குப் பணிந்தனுப்பப்படும் என மீனளத்துறை இயக்குநர் கூறுகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட அறிக்கை எப்பொழுது அரசுக்குக் கிடைத்தது ? இவ்வளவுநாள் காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம்? விரைவில் முடிக்க அரசாங்கத்தால் என்ன முயற்சி எடுக்கப்பட்டது ?